

நாம் இலங்கையின் முதன்மைத் தனியார் துறை வணிக வங்கியாவோம். வழமையான வர்த்தக வரைமுறைகளுக்கு அப்பால் பின்தங்கிய கிராமங்கள் முதல் உலகளாவிய சந்தை வரை தரமான வங்கிச் சேவைகளைக் கொண்டுசெல்ல மற்றெந்த வங்கியும் துணியாத மனப்பூர்வ முயற்சிகளை எடுப்பதற்கு எமது தொலைநோக்கான முன்னேற்றப் பயணம் எமக்கு வழிகாட்டியுள்ளது. “ஹட்னா குடும்பம்” என்று அன்புடன் அழைக்கப்படும் எமது ஊழியர்கள் அணியின் சாதனையாளர்களே இந்த மகத்தான பயணத்திற்கு உந்துசக்தியாக அமைகின்றனர். வரலாறு படைத்துத் தொடர்ச்சியாக முன்னோக்கிச் செல்லும் நாம், எமது முன்னோடியான வங்கிச் சேவைப் பயணத்தில் எம்மோடு இணையும்படி உற்சாகமும் ஆர்வமும் கொண்ட நபர்களுக்கு அழைப்பு விடுக்கின்றோம்.

# வங்கிச் சேவையை மகிழ்ச்சிகரமான அனுபவமாக்க எமக்கு உதவ வல்ல உத்வேகமான உங்களை நாம் தேடுகின்றோம்

# நுண்நிதி துணை அலுவலர்

HNB “கெமி புபுதுவ” என்ற பெயரில் ஹற்றன் நஷனல் வங்கி 1989ஆம் ஆண்டில் ஆரம்பித்த பிரத்தியேக நுண்நிதி திட்டம் அன்றிலிருந்து ஒரு சமூகப் புரட்சியை ஏற்படுத்தி வருகிறது. இத் திட்டம் வங்கியின் வெளிக்கள ஊழியர்களின் ஊடாக ஏராளமான சிறிய தொழில் முயற்சியாளர்களுக்கு நுண்ணளவு நிதித் தீர்வுகளை வழங்கியுள்ளதுடன், எண்ணற்ற மக்களுக்கு தொழில் வாய்ப்புக்களை உருவாக்கிக்கொடுத்துள்ளது. வெளிக்கள ஊழியர் அணியைப் பலப்படுத்துவதன் மூலம் இந்த நன்முயற்சியை மேலும் விரிவுபடுத்த உத்தேசித்துள்ள வங்கி, கிராமப்புற மக்களின் வாழ்க்கை மேம்பாட்டிற்காகச் சேவையாற்றக்கூடிய உத்வேகமான இளைஞர்களை நுண்நிதி துணை அலுவலர்களை நியமிக்கவிருக்கிறது.

## பணி வகுபாகம்

வங்கிச் சேவைகளை கிராமப்புற மக்களின் வாசலடிக்குக் கொண்டு செல்வதும் வங்கிக்கும் கிராமத்திற்கும் இடையே தொடர்பை வளர்ப்பதுமே கெமி புபுதுவ திட்டத்தின் நோக்கமாகும். சிறந்த ஒழுக்கநெறி மற்றும் நடத்தையைப் பேணுவதன் மூலம் வங்கியின் நன்மதிப்பை விருத்திசெய்யும் அதே வேளையில் கிராமப்புற வாடிக்கையாளர்கள் மத்தியில் நம்பிக்கையைக் கட்டியெழுப்புவது நுண்நிதி துணை அலுவலர்களின் பணியாகவிருக்கும்.

## தகைமைகள்

- க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் குறைந்தபட்சம் மூன்று சாதாரண சித்திகள்
- க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் கணிதம் மற்றும் ஆங்கிலம் உள்ளடங்கலாக குறைந்தபட்சம் ஐந்து திறமைச் சித்திகள் (ஒரே அமர்வில்)
- அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றினால் வழங்கப்பட்ட பூரணமான/பகுதியளவில் பூர்த்தி செய்யப்பட்ட தொழிலசார்/கல்வி தகைமை அனுகூலமாகவிருக்கும்.

## வயது

- 18 வயதிற்கும் 25 வயதிற்கும் இடையே

## திறன்கள் மற்றும் ஆற்றல்கள்

- வெளிக்களப் பணியிலும் இலங்கையின் எப்பாகத்தில் உள்ள வாடிக்கையாளர் நிலையங்களிலும் சேவையாற்றுவதில் தெளிவான அர்ப்பணிப்பு
- குறைந்தளவு மேற்பார்வையுடன் சுயாதீனமாக வேலை செய்யும் திறமை
- தகவல் தொழில்நுட்பம் பற்றிய அடிப்படை அறிவு
- சிறந்த மனித உறவாடல் திறமை மற்றும் வாடிக்கையாளர் சேவை மிக முக்கியம்
- சிறந்த தொடர்பாடல் திறமையும் சம்பந்தப்பட்ட வாடிக்கையாளர் பகுப்புடன் தொடர்புபடும் ஆற்றலும்
- நுண்ணளவு நிதியுதவி வெளிக்கள நடவடிக்கைகளிலான அனுபவம் ஒரு மேலதிக அனுகூலமாகக் கருதப்படும்

## மோட்டார் சைக்கிள் ஓட்டுவதற்கான அனுமதிப்பத்திரம் அத்தியாவசியமானது

## கடமைகள் மற்றும் பொறுப்புக்கள்

- தெரிவு செய்யப்படும் அலுவலர்கள் HNB நுண்நிதி (கெமி புபுதுவ) திட்டத்தின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட தனிநபர் இலக்கு எய்துவதற்கும் சேவைபுரியும் நுண்நிதி பிரிவின் இலாபத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கும் பொறுப்பாக இருப்பார்கள்.
- அவர்கள் பின்வரும் கடமைகளுக்கும் பொறுப்பாக இருப்பார்கள்:
  - வாடிக்கையாளர்களை அடையாளம் காணுதல், கடன்களை மதிப்பீடு செய்தல், கடன் பணம் வாடிக்கையாளரினால் சரியான முறையில் பயன்படுத்தப்படுவதை உறுதிசெய்தல்.
  - நிதியுதவி பெறும் வேலைத்திட்டங்களின் முன்னேற்றத்தைக் கண்காணித்தல்/மேற்பார்வை செய்தல்.
  - கடன் திட்டத்தின் தரச்சிறப்பை உறுதிப்படுத்துதல் மற்றும் சிறந்த மீட்பு விகிதத்தைப் பேணுதல்.
  - வாடிக்கையாளர்களுடன் சமுகமான வியாபார உறவுகளைப் பேணுதல்
  - சமூக நிகழ்வுகளில் பங்குபற்றுதல்/அவற்றை ஏற்பாடு செய்தல்.
  - குறுக்கு விற்பனை வாய்ப்புகளை இனங்காணுதல் மற்றும் அவற்றில் தீவிரமாக ஈடுபடுதல்.

**APPLY VIA XPRESSJOBS**

HNB

*நிபந்தனைகளுக்குட்பட்டது.ஃபிச் ரேட்டிங் A(lka) ஹற்றன் நஷனல் வங்கி, இலங்கை மத்திய வங்கியினால் உரிமம் அளிக்கப்பட்டு, மேற்பார்வை செய்யப்படும் ஒரு வர்த்தக வங்கி / Hatton National Bank PLC – PQ 82